# Chapter 3.2

# கீரைப்பாத்தியும் குதிரையும்

---

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**Question 1.**
‘ஏறப் பரியாகுமே’ என்னும் தொடரில் பரி’ என்பதன் பொருள் ……………………
அ) யானை
ஆ) குதிரை
இ) மான்
ஈ) மாடு

**Answer:**
ஆ) குதிரை

**Question 2.**
பொருந்தாத ஓசை உடைய சொல் ……………………
அ) பாய்கையால்
ஆ) மேன்மையால்
இ) திரும்புகையில்
ஈ) அடிக்கையால்

**Answer:**
இ) திரும்புகையில்

**Question 3.**
‘வண்கீரை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………
அ) வண் + கீரை
ஆ) வண்ண ம் + கீரை
இ) வளம் + கீரை
ஈ) வண்மை + கீரை

**Answer:**
ஈ) வண்மை + கீரை

**Question 4.**
கட்டி + அடித்தல் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ……………………
அ) கட்டியிடுத்தல்
ஆ) கட்டியடித்தல்
இ) கட்டி அடித்தல்
ஈ) கட்டு அடித்தல்

**Answer:**
ஆ) கட்டியடித்தல்

## சிறுவினா

## கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

**Answer:**

| வ.எண் | கீரைப்பாத்தி | குதிரை |
|---|---|---|
| (i) | மண் கட்டிகள் தூளாக்கப்படும். | வண்டியில் கட்டி அடித்து ஓட்டப்படும். |
| (ii) | மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்தியாக்குவர். | எதிரிகளை மறித்துத் தாக்கும். |
| (iii) | வாய்க்காலில் மாறிமாறி நீர் பாய்ச்சுவர். | கால் மாறி மாறிப் பாய்ந்து செல்லும். |
| (iv) | நீர் கடைமடையின் இறுதி வரை பாய்ந்து மடை மாற்றி விடத் திரும்பும். | செல்ல வேண்டிய இடங்களுக்குச் சென்று மீண்டும் திரும்பி வரும். |

இக்காரணங்களால் கீரைப்பாத்தியும் ஏறிப் பயணம் செய்யும் குதிரையும் ஒன்றாகக் கருதப்படும்.

## சிந்தனை வினா

## நீங்கள் எவற்றைக் குதிரையோடு ஒப்பிடுவீர்கள்?

**Answer:**
நான் காளைமாடு, ஆறு ஆகியவற்றை குதிரையோடு ஒப்பிடுவேன்.

### ஆறும் குதிரையும் :

- ஆறு – வேகமாக ஓடும். மெதுவாகப் பாய்ந்து வயலை வளப்படுத்தும்.
- குதிரை – வேகமாக ஓடும். பகைவரைத் தாக்கும். அன்புடன் தலை சாய்க்கும்.

### காளையும் குதிரையும் :

- காளை – வேகமாக ஓடும். வண்டி இழுக்கும் உரிமையாளரிடம் அன்போடு பழகும்.
- குதிரை – வேகமாக ஓடும். வண்டி இழுக்கும் உரிமையாளரிடம் அன்போடு அமைதியாக நிற்கும்.

### கற்பவை கற்றபின்

**Question 1.**
இருபொருள் தரும் சொற்கள் சிலவற்றை எழுதி, அவற்றின் இரு பொருள்களையும் எழுதுக.

**Answer:**
(எ.கா.) மாலை – மலர் மாலை, அந்திப் பொழுது

| சொல் | இருபொருள்கள் | சொல் | இருபொருள்கள் |
|---|---|---|---|
| ஆழி | கடல், மோதிரம் | ஈ | கொடு, 'ஈ' என்னும் பூச்சியினம் |
| படி | மாடிப்படி, நூலைப்படி | திரை | திரைச்சீலை, அலை |
| ஆறு | ஓர் எண், நதி | அரி | சிங்கம், திருமால் |
| திங்கள் | சந்திரன், மாதம் | நூல் | புத்தகம், இழை |
| ஞாயிறு | சூரியன், கிழமையின் பெயர் | பார் | உலகம், பார்த்தல் |
| மெய் | உடல், உண்மை | செய் | வயல், செயலில் ஈடுபடு |
| தை | தை மாதம், துணி தைத்தல் | மதி | நிலவு, அறிவு |
| பணி | பணிதல், வேலை | முயல் | முயற்சி செய், முயல் |

### கூடுதல் வினாக்கள்

### சொல்லும் பொருளும் :

1. வண்கீரை – வளமான கீரை
2. முட்டப் போய் – முழுதாகச் சென்று

3. மறித்தல் – தடுத்தல் (மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்தி கட்டுதல்) எதிரிகளைத் தடுத்துத் தாக்குதல்
4. பரி – குதிரை
5. கால் – வாய்க்கால், குதிரையின் கால்

**நிரப்புக.**

**Question 1.**
ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும்படி பாடப்படுவது ………….. எனப்படும்.

**Answer:**
இரட்டுற மொழிதல்

**Question 2.**
இரட்டுற மொழிதலை ……………. என்றும் கூறுவர்.

**Answer:**
சிலேடை

**Question 3.**
பரி என்பதன் பொருள் ………………

**Answer:**
குதிரை

**Question 4.**
வண்கீரை என்பதன் பொருள்

**Answer:**
வளமான கீரை

**Question 5.**
காளமேகப்புலவரின் இயற்பெயர் ……

**Answer:**
வரதன்

**Question 6.**
கீரைப்பாத்தியும் குதிரையும் ……………. என்னும் நூலில் இடம்

பெற்றுள்ளன.

**Answer:**
தனிப்பாடல் திரட்டு

**விடையளி :**

**Question 1.**
இரட்டுற மொழிதல் என்றால் என்ன?

**Answer:**
ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும்படி பாடப்படும் பாடல் இரட்டுறமொழிதல் ஆகும்.

**Question 2.**
காளமேகப்புலவர் எழுதிய நூல்கள் யாவை?

**Answer:**
திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களைக் காளமேகப்புலவர் எழுதியுள்ளார்.

**பாடலின் பொருள்**

கீரைப்பாத்தியில்
மண் கட்டிகளை அடித்துத் தூளாக்குவர். மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்திகளாக்கி வைத்திருப்பர். வாய்க்காலில் மாறி மாறி நீர் பாய்ச்சுவர். நீர் கடைமடையின் இறுதி வரை சென்று மாற்றி விடத் திரும்பும்.

**குதிரை**
வண்டிகளில் கட்டி, அடித்து ஓட்டப்படும், கால் மாறிமாறிப் பாய்ந்து செல்லும் ; எதிரிகளை மறித்துத் தாக்கும்; போக வேண்டிய இடம் முழுவதும் சென்று மீண்டும் திரும்பி வரும். இக்காரணங்களால் கீரைப் பாத்தியும், ஏறிப் பயணம் செய்யும் குதிரையும் ஒன்றாகக் கருதப்படும்.